Registered as a News Paper பக்கங்கள்: 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 14 (28-01-1992) செவ்வாய்க்கிழமை ஓசை: 344

## காங்கேசன் தொழிற்சாலையை மூடுவதில் அரசுக்குச் சிக்கல்

(கொழும்பு)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை மூடுவதற்குச் சிறிலங்கா அரசு தயாராக இருந்தபோதும் அதற்கு உதவி புரியும் நிறுவனங்களின் அழுத்தத்தால் அதனைமூட அரசாங்கத்தால் முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையின் சகல வரவுசெலவுக் கணக்குகள்யாவும் முடிக்கப்பட்டு அதனை மூடுவதற்கான முயற்சிகளில் கைத்தொழில் அமைச்சு முயன்றுவந்தது. அத்துடன் இதற்கான நிதி ஒதுக்கீட்டினைத் தென்னிலங்கையில் உள்ள சீமெந்துத்தொழிற் சாலையில் முதலிடவும் நடவடிக்கை எடுத்துவந்தது. ஆனால் நிதி வழங்கும் தனிப் பட்ட வெளிநாட்டு நிறுவனங்கள் அரசாங்கத்தின் (4 ஆம் பக்கம் பார்க்க)

# போரை நிறுத்தி புலிகளுடன் பேசுங்கள்

# சிறிலங்கா அரசுக்கு கனடா வலியுறுத்து

## உதவியை வெட்டுவோம் என எச்சரிக்கை

(கொழும்பு)

போர்நிறுத்தம் செய்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி, தமிழரின் இனப்பிரச்சினைக்கு ஒரு சமாதானத் தீர்வு காணுமாறு கனடா அரசாங்கம் பிரேமதாசா அரசை நிர்ப்பந்தித்துள்ளது. இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளாது போனால் சிறிலங்காவுக்கு வழங்கப்படும் உதவிகளை நிறுத்தவேண்டி ஏற்படும் எனவும் கனடா அரசாங்கம் எச்சரித்துள்ளது.

நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய 11பேரைக் கொண்ட கனேடிய தூதுக் குழு ஒன்று தற்சமயம் கொழும்பு வந்திருக்கிறது. இந்தத் தூதுக் குழுவிற்கு முன்னாள் உலக திருச்சபையின் தலைவர் வண. டாக்டர் லோவிஸ் வில்சன் தலைமை வகிக்கிறார்.

நல்லெண்ணத் தூதை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் இந்தக் கனேடிய மனித உரிமைக் குழு கொழும்பில் பல அரசியல் தலைவர்களை சந்தித்து வருகிறது. இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாணப்படவேண்டுமென வலியுறுத்திவரும் இந்த நல்லெண்ணத் தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் பேச்சுவார்த்தை நடக்கும் பட்சத்தில் கனடா அரசாங்கம் மத்தியஸ்துவம் வகிக்கவும் தயாராக இருப்ப (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் சுட்டுக்கொலை

(திருக்கோணமலை)

கடற்கரைச்சேனை என்னும் இடத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு தமிழ் பொதுமகன் ஒருவர் பலியானார்.

கனகையா சித்திரவேல் (வயது 69) என்னும் வயோதிபரே இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானவராவார்.

## கொள்ளையர் இருவர் கைது

(கொழும்பு)

வவுனியா செல்லும் ரயிலில் தமிழ்ப் பயணிகளிடம் இருந்து கொள்ளையடித்து வந்த இரு இளைஞர்களை ராகம பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த இருவரையும் ராகம ரயில் நிலையத்தில் தாம்கைது செய்ததாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கண்காட்சியை நள்ளிரவில்இராணுவம் சிதைத்தது

(கொழும்பு)

மாத்தறை நகரில் உயன்வத்தை விளையாட்டரங்கில் இடம் பெற்ற கண்காட்சியொன்று சிறிலங்கா இராணுவத்தால் தாக்கி சேதப்படுத்தப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தும் புகைப் படங்களும், படங்களும் கொண்டு அடக்குமுறை அட்டூழியங்களை விளக்க இக் கண்காட்சி ஒழுங்கு படுத்தப் பட்டிருந்தது.

சாதாரண உடையணிந்து முகமூடி தரித்த ஆயுதபாணிகளான சிலர் நள்ளிரவு ஒரு மணியளவில் இக்கண்காட்சிக் கூடத்தினுள் திடீரெனப் புகுந்து கண்கண்டதெல்லாவற்றையும் அடித்து நொருக்கிச் சேதப்படுத்தியதுடன் ஏனையவற்றை வாரிச் சுருட்டிக் கொண்டு சென்றுள்ளனர். காவலுக்கு நின்ற ஒருவர் நையப்புடைக்கப்பட்டுள்ளார். வாய் திறக்க முற்படும் சாதாரண பொது மக்களுக்கு இது ஒரு பாடம் என்று ஒரு நாடாளுமன்றப் பிரதிநிதி இதனை வர்ணித்துள்ளார்.

அடுத்து வரும் நாட்களில் இத்தகைய கண்காட்சிகளை நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் ஒழுங்கு செய்ய குடிமக்கள் முன்னணி தீர்மானித்திருந்தது. இலங்கையில் 1988 முதல் 1990ஆம் ஆண்டுக்கு இடையில் ஏறத்தாழ 60 000 பேர் கடத்தப்பட்டு, அல்லது காணாமல் போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ் மக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ அடாவடித்தனம் திருமலையில் தொடர்கிறது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்புகள், கைதுகள், சித்திரவதைகள் தொடர்ந்து நடைபெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 22 ஆம் திகதி திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள 42 ஆம் கொலனியிலுள்ள 9 அப்பாவிப் பொது மக்கள் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.

மாரிமுத்து மாணிக்கராசா (26 வயது), நாகராசா யோக சந்திரன் (22 வயது), திருமண மானவரான சின்னத்தம்பி கந்தசாமி (30 வயது), சரவண முத்து ரட்ணசிங்கம் (24வயது) பாக்கியம் தயா (17 வயது), சபாபதிப்பிள்ளை ஈஸ்வரன் (20 வயது) சித்திரவேல் கோணசிங்கம் (22 வயது) திருமணமானவரான தாமோதரம்

## கனடா நல்லெண்ணக் குழு தொண்டமானைச் சந்தித்தது

சிறிலங்காவுக்கு நல்லெண்ண தூதை மேற்கொண்டு தற்சம

இத் தூதுக்குழு அமைச்சர் தொண்டமானுடன் ஒரு மணி

அமைச்சர் எடுத்துக்கூறினார். சிறிலங்கா வெளிவிவகார

## சிறிலங்காகடற்படைக்கு அதிவேக ரோந்துப்படகு

...சொதித்துள்ளது.

நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய 11பேரைக் கொண்ட கனேடிய தூதுக் குழு ஒன்று தற்சமயம் கொழும்பு வந்திருக்கிறது. இந்தத் தூதுக் குழுவிற்கு முன்னாள் உலக திருச்சபையின் தலைவர் வண. டாக்டர் லோவிஸ் வில்சன் தலைமை வகிக்கிறார். நல்லெண்ணத் தூதை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் இந்தக் கனேடிய மனித உரிமைக் குழு கொழும்பில் பல அரசியல் தலைவர்களை சந்தித்து வருகிறது. இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வுகாணப்பட வேண்டுமென வலியுறுத்திவரும் இந்த நல்லெண்ணத் தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்கும் மத்தியில் பேச்சுவார்த்தை நடக்கும் பட்சத்தில் கனடா அரசாங்கம் மத்தியஸ்துவம் வகிக்கவும் தயாராக இருப்ப

(4ஆம் பக்கம் பார்க்க)

# கனடா நல்லெண்ணக் குழு தொண்டமானைச் சந்தித்தது

சிறிலங்காவுக்கு நல்லெண்ண தூதை மேற்கொண்டு தற்சமயம் கொழும்பு வந்திருக்கும் கனேடிய மனித உரிமைக் குழுவினர் அமைச்சர் தொண்டமானை சந்தித்துபேச்சுக்களை நடத்தினர். திரு. தொண்டமானின் தீர்வுத் திட்டம் பற்றியும், புலிகளுடன்பேச்சுக்களை நடத்த அவர் மேற்கொண்ட சமரஸ முயற்சிகள் பற்றியும் கனேடிய தூதுக்குழுவினர் ஆர்வத்துடன் விசாரித்தனர்.

இத் தூதுக்குழு அமைச்சர் தொண்டமானுடன் ஒரு மணி நேரம்வரை பேச்சுக்களை நடத்தியது

இனப் பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுக்கள்மூலம் தீர்வு காணும் அணுகுமுறையை திரு. தொண்டமான் வலியுறுத்தினார். அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் எனவும் அமைச்சர் எடுத்துக்கூறினார்.

சிறிலங்கா வெளிவிவகார செயலாளர் திரு. பேர்னாட் திலகரெத்னா, பிரதமமந்திரி திரு. டி. பி. விஜயதுங்கா, பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் ரணதுங்கா, முப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரையும் கனேடிய தூதுக் குழுவினர் சந்தித்துப்பேசினர்.

# மலையகம்மட்டுநகர்செல்வர்

(கொழும்பு)

கொழும்பு வந்துள்ள கனேடிய நல்லெண்ணத் தூதுக் குழுவினர் தமது விஜயத்தின் ஒரு கட்டமாக இலங்கையின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

தூதுக்குழுவில் இடம் பெற்றுள்ள ஒன்பது பேரில், இருவர் கண்டி, தங்கலை, வவுனியா ஆகிய நகரங்களுக்கும் ஏனைய ஏழு பேரும் மட்டக்களப்பிற்கும்தமது விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதிகளில் இருந்து தூதுக்குழுவினர் கொழும்பு திரும்பிய பின்னர், கனடா திரும்புவதற்குள் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவையும் சந்தித்துப் பேசவுள்ளனர் எனத் தெரியவருகிறது.

# அரசிற்கு உதவ வேண்டாம்; லலித் குழுவின் பிரசாரம்

(கொழும்பு)

இலங்கைக்கு இந்த ஆண்டு வெளிநாட்டு உதவியை வழங்கும்படி சிபார்சு செய்யவேண்டாமென கேட்டுக்கொள்ளும் நோக்குடன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கட்சி வெளிநாட்டு தூதரகங்களுக்கு விஜயம் செய்துள்ளது என்று 'டெய்லி நியூஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து இக்கட்சியின் தலைவர் காமினி திசநாயக்கா வெளிநாட்டு தூதரகங்களுக்கு லலித்அத்துலத் முதலியுடன் விஜயம் செய்திருந்தார் என்றும்,

இவர்கள் சுவீடன், நோர்வே அமெரிக்கா, ஜப்பான் மற்றும் கனேடிய தூதரகங்களுக்குவிஜயம் செய்து இந்தச் சிபார்சுகளை செய்தார்கள் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

## என்மீதான குற்றச்சாட்டுகள் உண்மைக்குப் புறம்பானது
### - ஆரியரெட்னா

(வவுனியா)

என்மீது பேசப்படும் ஊழல் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பானது. நான் புதிதாக அரசியல் கட்சி ஒன்றை அமைக்க உள்ளேன் என்பதும் புதிய கட்சியில் சேர உள்ளேன் என்பதும் திட்டமிட்டுப் பரப்பப்படுகின்ற வதந்தி என்று சர்வோதயத்தின் இலங்கைக்கான தலைவர் ஏ. ரீ. ஆரியரட்னா வவுனியாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி வவுனியா சர்வோதய கிளை அலுவலகத்திற்கு வருகை தந்த அவர் அதன்ஊழியர்கள் மத்தியில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தேசிய ரீதியில் இலங்கையில் சிறந்ததொரு அரசியல் கட்சி உதயமாகவேண்டியதுதவிர்க்க முடியாதது. ஆனால் நான் புதிதாக அரசியல் கட்சி ஒன்றை அமைக்க உள்ளேன்

(4 ஆம் பக்கம் பார்க்க )

...தபரை இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான வராவார்.

## கொள்ளையர் இருவர் கைது

(கொழும்பு)

வவுனியா செல்லும் ரயிலில் தமிழ்ப் பயணிகளிடம் இருந்து கொள்ளையடித்து வந்த இரு இளைஞர்களை ராகம பொலிசார் கைது செய்துள்ளனர்.

இந்த இருவரையும் ராகம ரயில் நிலையத்தில் தாம்கைது செய்ததாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

...தப்பட்டுள்ளது. சிறிலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தும் புகைப் படங்களும், படங்களும் கொண்டு அடக்குமுறை அட்டூழியங்களை விளக்க இக் கண்காட்சி ஒழுங்கு படுத்தப் பட்டிருந்தது.

சாதாரண உடையணிந்து முகமூடி தரித்த ஆயுதபாணிகளான சிலர் நள்ளிரவு ஒரு மணியளவில் இக்கண்காட்சிக் கூடத்தினுள் திடீரெனப் புகுந்து கண்கண்டதெல்லாவற்றையும் அடித்து நொருக்கிச் சேதப்படுத்தியதுடன் ஏனைய

...ஒரு பாடம் என்று ஒரு நாடாளுமன்றப் பிரதிநிதி இதனை வர்ணித்துள்ளார்.

அடுத்து வரும் நாட்களில் இத்தகைய கண்காட்சிகளை

...இடையில் ஏறத்தாழ 60 000 பேர் கடத்தப்பட்டு, அல்லது காணாமல் போயுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ் மக்க

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காகடற்படைக்கு அதிவேக ரோந்துப்படகு

(கொழும்பு)

சிறிலங்கா கடற்படையினர் புதிய ரக அதிவேக ரோந்துப் படகுகளைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இப்படகுகள் இரண்டு டீசல் என்ஜின்கள் பொருத்தப்பட்டவை எனவும், 40 கடல்மைல் வேகத்தில் செல்லக் கூடியவை எனவும், ஆறு தொன் எடையும், 45 அடி நீளமும் உடையவை எனவும் தெரியவருகின்றது.

இந்தப் படகுகள் உள்ளூரிலேயே வடிவமைக்கப்பட்டவை எனவும், இதுபோன்ற 19 படகுகள் ஏற்கனவே கடற்படைக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும், இவற்றில் நான்கு புதிய ரகப் படகுகள் எனவும் தெரியவருகின்றது இப்படகுகள்பிரதானமாக மன்னார் குடாக்கடலில் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும், புதியரகப் படகுகள் சுப்பர் டோராப் படகுகளை விட வேகமாகச் செல்லக்கூடியவை எனவும் சொல்லப்படுகின்றது.

## குடாக் கடலில் மீனவர் மீது இராணுவம் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக் கடலில் கடற்தொழிலாளர்கள்மீது மண்டைதீவில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடாத்தி வருகின்றனர்.

நேற்று முன் தினம் இரவு 11-30 மணியளவில் யாழ் குடாக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூவர் மீது யந்திரப் படகொன்றில் வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்த பின்னர் அவர்களை கைது செய்துள்ளனர். அவர்களின மீன்பிடி உபகரணங்கள் சிலவற்றை சேதமாக்கிய பின் ஏனையவற்றை பறிமுதல் செய்தனர். பின்னர் மூன்று மீனவர்களையும் கடலில் வீசியுள்ளனர்.

மனுவல் சிறில் (மயிலிட்டி), சிறில் சூரியன், சாமிநாதன் ஆகிய மூவருமே கைது செய்யப்பட்டு பின் கடலில் வீசப் பட்டவர்கள் ஆவர்.

இதேவேளை நேற்று அதிகாலை 2-30 மணியளவில் குடாக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதும் சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இராணுவ அடாவடித்தனம் திருமலையில் தொடர்கிறது

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்புகள், கைதுகள், சித்திரவதைகள் தொடர்ந்து நடைபெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 22 ஆம் திகதி திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள 42 ஆம் கொலனியிலுள்ள 9 அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு பலமாக தாக்கப்பட்டபின் முகாமிற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளனர்.

மாரிமுத்து மாணிக்கராசா (26 வயது), நாகராசா யோகசந்திரன் (22 வயது), திருமணமானவரான சின்னத்தம்பி கந்தசாமி (30 வயது), சரவணமுத்து ரட்ணசிங்கம் (24வயது) பாக்கியம் தயா (17 வயது), சபாபதிப்பிள்ளை ஈஸ்வரன் (20 வயது) சித்திரவேல் கோணசிங்கம் (22 வயது) திருமணமானவரான தாமோதரம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சீனன்குடா குண்டுவெடிப்பு
# நாசவேலையாக இருக்கலாம் புலனாய்வுத்துறை சந்தேகம்

(கொழும்பு)

சீனன் குடா விமானதளக் குண்டு வெடிப்பு ஒரு நாசகார செயலாக இருக்கலாமென இச்சம்பவம் தொடர்பாக விசாரிக்கும் புலனாய்வு உயர் அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். விமானப் படைத் தளத்தில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த சமயம் உயிரிழந்தவர்களில் சாதாரண பொதுமக்களும் அடங்குகின்றனர் என்பதை அடிப்படையாகக் கொண்டுவிமான தளத்தை சுற்றி குடியிருக்கும் மக்களிடம் விசாரணைகளை புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை டெட்டனேட்டர்களும், வெடிப் பொருள்களும் சம்பவம் நடந்த இடத்தில் புதைக்கப்பட்டிருந்ததால் சம்பவம் நடந்த இடத்தைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை வந்த அகதிச் சிறுமி
# அமைச்சர் வழங்கிய உணவை அவரிடமே கொடுத்தார்

(லண்டன்)

தமிழகத்திலிருந்து திருக்கோணமலைக்கு கொண்டு வரப்பட்ட அகதிகளுக்கு அமைச்சர் தயாரத்னா உணவுப் பார்சல்களை விநியோகித்த போது அதனைப் பெற்றுக் கொண்ட ஒரு சிறுமி உடனடியாகவே அப்பார்சலை மீண்டும் அமைச்சரிடமே ஒப்படைத்தார். நீண்ட நேரக் களைப்பான பிரயாணத்தின் பின் சாப்பாட்டுப் பார்சலை மீண்டும் அச்சிறுமி கையளித்த செயலானது அமைச்சர் மீதோ அரசாங்கத்தின் மீதோ நம்பிக்கையில்லை என்பதையே எடுத்துக்காட்டுவதாக பி.பி.சியின் சிங்கள சேவை கருத்து வெளியிட்டது.

# பழுதடைந்த யுத்த டாங்கிகள்: இராணுவம் எதிர்கொள்ளும் சிக்கல்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தினரால் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட மென்ரக டாங்கிகளில் பல பழுதடைந்த நிலையில் உள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார். கலைக்கப்பட்ட 'வார்சோ' அமைப்பு நாடுகளிடமிருந்து மலிவு விலையில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த டாங்கிகளின் தரம்குறித்து இராணுவ வட்டாரங்களில் பெரும் அதிருப்தி நிலவுவதாகவும் தெரிய வருகிறது.

கடந்த 5 ஒக்டோபரில் ஹங்கேரியிடமிருந்து ஒவ்வொன்றும் 80 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான 25மென்ரக டாங்கிகள் வாங்கப்பட்டிருந்தன. இவற்றில் நான்கு உதிரிப்பாகங்கள்இல்லாததால்முற்றாகப் பாவிக்கமுடியாத நிலையையடைந்துள்ளன.

இந்த மென்ரக டாங்கிகள் பல காலம் பாவிக்கப்பட்டபின் மறுசீரமைக்கப்பட்ட பின்பே சிறிலங்காவிற்கு மலிவு விலையில் விற்கப்பட்டிருந்தன. இப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மகாபொல

## கொடுப்பனவு

### 1ஆம் 2ஆம் தவணைப் பணம்

மேற்படி கொடுப்பனவு பின்வரும் மாணவர்களுக்கு கீழ்வரும் அட்டவணைப்படி செயற்படும்.

**இரண்டாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் ) | 27-01-92 | 1.30—3.பி.ப |
| கலைப்பிரிவு ) | 31-01-92 | 1.30—3பி.ப |
| வர்த்தகப்பிரிவு ) | 07-02-92 | 1.30—3பி.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு ) | | |

**மூன்றாம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் ) | 28 01-92 | 9—12மு.ப |
| கலைபபிரிவு ) | 03-02-92 | 9—12மு.ப |
| வர்த்தகப்பிரிவு ) | 10-02-92 | 9—12மு ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு ) | | |

**நான்காம் வருடம்**

| | | |
|---|---|---|
| மருத்துவபீடம் (4-ம்5-ம்வரு ) ) | 29-01-92 | 1 30—3பி.ப |
| கலைப்பிரிவு ) | 05-02-92 | 1 30—3பி ப |
| வர்த்தகப்பிரிவு ) | 11-02-92 | 1.30—3பி.ப |
| வியாபார நிர்வாகப்பிரிவு ) | | |

**2 ம் 3-ம் 4 ம் வருடம்**

| | | |
|---|---|---|
| பௌதீக விஞ்ஞானப் பிரிவு ) | 30-01-92 | 9—12மு.ப |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு ) | 06-02-92 | 9—12மு.ப |
| | 12-02-92 | 9—12மு.ப |

கொடுப்பனவுகளின் போது சமர்ப்பிக்கப்படவேண்டியவை:

1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

(சி-3856)

## முக்கிய அறிவித்தல்

நம்பிக்கையான தகவலைத் தொடர்ந்து போலி ஆர். வி ஜி பீடி தயாரித்து விற்பனை செய்த சிலபோலி தயாரிப்பாளர்களையும் உபகரணங்களையும் தமிழீழ காவல் துறையினர் பிடித்துள்ளனர். இதுவிடயமாக மேலும் புலன் விசாரணை நடாத்திவருகின்றனர்.

மேற் கொண்டு போலி ஆர். வி. ஜி பீடி சம்பந்தமான தகவல்களை வரவேற்கிறோம்.

ஏற்கனவே தகவல் தந்தவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆர். வி. ஜி. பீடி நிர்வாகம்**

58 குறுக்குத் தெரு,

நல்லூர், யாழ்ப்பாணம்.

(2152)

உள்நாட்டு, சர்வதேச

ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில்

# தேவையற்ற ஒருவருக்கு இருதய சத்திர சிகிச்சை

(கொழும்பு)

கொழும்புசிறிஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை தேவையற்ற ஒருவருக்கு இருதயசத்திர சிகிச்சை செய்யப்பட்டதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனதுஅறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறிஜெயவர்த்தனபுரபொது வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இருதய ஊடக (பைபாஸ்) சத்திர சிகிச்சை தொடர்பான வெற்றிகள்குறித்து வைத்தியசாலை பேச்சாளர் கொடுத்த தகவல்கள் முழு அளவில் பிழையானவையாகவும் இதுவரை உள்நாட்டு குழு நிபுணர்கள் சத்திரசிகிச்சை தொடர்பாக அடைந்து வந்த தோல்விகளை மூடிமறைத்து பொதுமக்களை ஏமாற்றி தவறான வழிக்கு இட்டுச் செல்வனவாகவும் உள்ளன.

இருதய ஊடக சத்திர சிகிச்சையினை செய்யக்கூடிய வசதிகளை இந்தவைத்தியசாலை கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. அங்கு நடத்தப்பட்ட வெளிநாட்டு நிபுணர் குழுவின் 30 சத்திர சிகிச்சைகளில் மூன்றுபேர் இறந்துள்ளனர். உள்நாட்டு நிபுணர் குழுவின் எட்டு இருதய சத்திர சிகிச்சையில் நாலுபேர் இறந்துள்ளனர்.

சத்திர சிகிச்சையின் பின் உயிருடன் இருக்கும் நோயாளி ஒருவருக்கு ஒருவால்வு மட்டும் நோய் கண்டிருந்தது. இருதய சிகிச்சை நிபுணர்களின் கருத்துப்படி இவருக்கு சத்திர சிகிச்சை தேவையற்றது என கூறப்படுகிறது.

இருதய ஊடக சிகிச்சையினை முன்னேற்றம் அடையச் செய்ய அரசாங்கத்திற்குஇருக்கும் ஆவலினையும், பெருவிருப்பத்தினையும் வரவேற்கும் அதேவேளை, ஏற்றுக் கொள்ளத்தக்க நிபுணத்துவமும், நன்கு பயிற்சியும் பெற்ற நிபுணர்களது சேவைகளைப்பயன்படுத்துவதனாலேயே இதுமுழு அளவில் சாத்தியமாகுமென சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் பரிஷ் தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

## பதவி வெற்றிடம்

### கல்வி உத்தியோகத்தர்

**தகைமைகள்:-**

க. பொ. த. உயர்தர வர்த்தகப் பிரிவில் குறைந்தது மூன்று பாடங்களில் சித்தி.

**சம்பளத்திட்டம்:-**

1085-40X3-50X10-1705/- இத்துடன் இதர படிகளும். விண்ணப்பங்கள் யாவும் 09. 02. 1992க்கு முன்பாக, பொது முகாமையாளர், தெ. ப. பொ. உ. வி.கூ. சங்கம் மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

★ விண்ணப்பப்பத்திரத்தைச் சங்கக் காரியாலயத்தில் ரூபா 10/- செலுத்தி பெற்று, அவற்றையே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

(2154)

## சமூகமேம்பாட்டுத் திட்டக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் 'சமூகமேம்பாடு' பற்றிய கருத்தரங்கு வரும் 8,9 ஆம் திகதிகளில் யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள முறைசாராக் கல்வி உபவள நிலையத்தில் நடைபெற உள்ளது.

இக் கருத்தரங்கு காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை சமூகமேம்பாட்டின் முக்கியத்துவம், சமூகப்பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகளை விடுவிக்கும் வழிவ

## சகல வர்த்தகர் சங்கங்களுக்கும் ஓர் முக்கிய அறிவித்தல்

வட பிராந்திய வர்த்தகர் சங்க சமாஜம் அமைப்பது பற்றிய எமது 1-1-92 கடிதம் சகல வர்த்தகர் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டது. வட பிராந்திய வர்த்தகர் சங்க சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 05. 05. 1924

மறைவு 30 12. 1991

அமரர்

### திரு. கதிரிப்பிள்ளை கந்தையா

[சமாதான நீதிவானும், பன்குளம் கந்தையா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்)

பண்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் அறிவின் சுடரொளியாய் ஒளிவீசி எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத்தெய்வத்தின் 31 ஆம் நாள் நினைவாக நாளை புதன்கிழமை 'துவாரகை' இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

'துவாரகை'
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(சி/3885)

## நினைவு கூருகின்றோம்...

**1992-01-28**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் சம்பூரில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**சீலன்** [ கணபதிப்பிள்ளை, ஈஸ்வரன் - பாரதிபுரம், மூதூர் ]

முறக்கொட்டாஞ்சேனையில் வீரச்சாவெய்திய

❋ **எஸ். பாலையா** [ முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு ]

ஆர். வி ஜி பீடி தயாரித்து விற்பனை செய்த சிலபோலி தயாரிப்பாளர்களையும் உபகரணங்களையும் தமிழ்ஈழ காவல் துறையினர் பிடித்துள்ளனர். இதுவிடயமாக மேலும் புலன் விசாரணை நடாத்திவருகின்றனர்.

மேற் கொண்டு போலி ஆர். வி. ஜி பீடி சம்பந்தமான தகவல்களை வரவேற்கிறோம்.

ஏற்கனவே தகவல் தந்தவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## ஆர். வி. ஜி. பீடி நிர்வாகம்

58 குறுக்குத் தெரு,

நல்லூர், யாழ்ப்பாணம்.

(2152)

## உள்நாட்டு, சர்வதேச தொலைத் தொடர்புகள்

1. உள்நாட்டுத் தந்தி
   (24 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
2 வெளிநாட்டுத் தந்தி
   (30 மணித்தியாலங்களில் உரியவரிடம் சேரும்)
3. **FAX** (ஃபக்ஸ்)
   - உள்ளூர் செய்திகள் (24 மணித்தியாலங்களில் சேரும்)
   - வெளிநாட்டுச் செய்திகள் (24 மணித்தியாலங்களில் சேரும்)
   (செய்திகள் A4 அளவு தாளில் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்)
4. **TELEX** (ரெலெக்ஸ்)
   (24 மணித்தியாலங்களில் சேரும்)
5. தொலைபேசி - செய்தி
   (120 மணித்தியாலங்களில்) (5 நாட்களின் பின் பதிலுடன் அறிவிக்கப்படும்)
   - அவசர (URGENT) தொலைபேசிச்செய்தி (பதிலுடன் 2நாட்கள்) (48 மணித்தியாலங்களில்)
6. ரேடியோ அல்லது பத்திரிகை விளம்பரங்கள்
   - மரண அறிவித்தல்கள் (2 நாட்கள்)
   - பிறந்தநாள் வாழ்த்துக்கள் போன்றவை (3 நாட்கள்)
   - கலர்படங்கள் 15 நாட்களில் கழுவிக் கொடுக்கப்படும்

## BEACON

தொலைத்தொடர்புகள்,

380, ஆஸ்பத்திரி வீதி,
ஸ்ரேசன் சந்தி,
யாழ்ப்பாணம். (சி 3813)

★ விண்ணப்பப்பத்திரத்தைச் சங்கக் காரியாலயத்தில் ரூபா 10 /- செலுத்தி பெற்று, அவற்றையே நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

(2154)

## சகல வர்த்தகர் சங்கங்களுக்கும் ஓர் முக்கிய அறிவித்தல்

வட பிராந்திய வர்த்தகர் சங்க சமாஜம் அமைப்பது பற்றிய எமது 1-1-92 கடிதம் சகல வர்த்தகர் சங்கங்களுக்கும் அனுப்பப்பட்டது. வட பிராந்திய வர்த்தகர் சங்க சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டம் 29-1-92 புதன் கிழமை மாலை 2.00 மணிக்கு இல. 162, யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ். வர்த்தகர் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

ஒவ்வோர் வர்த்தகர் சங்கப் பிரதிநிதிகள் இருவர் (தலைவர்; செயலாளர் தவறாது சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

பொ. நடராசா
உப-செயலாளர்

க.வி.குலரத்தினம்
தலைவர்.

யாழ் வர்த்தகர் சங்கம்

(2153)

## சமூகமேம்பாட்டுத் திட்டக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வளர்ந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் 'சமூகமேம்பாடு' பற்றிய கருத்தரங்கு வரும் 8,9 ஆம் திகதிகளில் யாழ். தேவரையாளி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள முறைசாராக் கல்வி உபவள நிலையத்தில் நடைபெற உள்ளது.

இக் கருத்தரங்கு காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை சமூகமேம்பாட்டின் முக்கியத்துவம், சமூகப்பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகளை விடுவிக்கும் வழிவகைகள் என்ற விடயங்களில் நடைபெறும்.

## வரி விளம்பரம்

இப்பில், இப்பில்

கால்நடை தீவனமாக, விறகாகப் பசளையாகப் பயன்படுவது ரூபா .2/- பெறுமதியான அஞ்சல் முத்திரை அனுப்பி விதையைப் பெறலாம். - மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி 3851

## கம்பியூட்டர் கல்வி

■ **Basic** ■ ***dBaseIII+*** ■ **Lotus 1-2 3**
■ **Word Star 2000+**


### புதிய பிரிவுகள் ஆரம்பம்

வடமராட்சியில்...
10.02.92 திங்., புத., வெள்.

யாழ்நகரில்...
01.02.92 (சனி, ஞாயிறு
மாலை 3.30 மணி)
03.02.92 (திங்., செ., புத., வெள்.
காலை 10.30 மணி)

விபரங்களுக்கு:

## யுனிக்கோ கொம்பியூட்டர் சென்ரர்




சதா பொண்ஸ்
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3853)

## நினைவு கூருகின்றோம்...

**1992-01-28**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் சம்பூரில் சிறிலங்காப் படையினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

சீலன் [ கணபதிப்பிள்ளை, ஈஸ்வரன் - பாரதிபுரம், மூதூர் ]

முறக்கொட்டாஞ்சேனையில் வீரச்சாவெய்திய

எஸ். பாலையா [ முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு ]

சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு கடலில் வீசப்பட்ட மூதூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த 4 தமிழர்கள்

திருக்கோணமலை கும்புறுப்பிட்டியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழ் விவசாயிகள்

1987ஆம் ஆண்டு கொக்கட்டிச்சோலையில் சிறிலங்கா அதிரடிப்படையினர் சூட்டில் வீரச்சாவெய்திய

துரைசிங்கம் [ தா. துரைசிங்கம் - கோவில் போரதீவு, மட்டக்களப்பு ]

1988ஆம் ஆண்டு கோவில் குளத்தில் இந்தியப் படையினரின் சுற்றி வளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

ரவி [ அழகையா ரவீந்திரன் - புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு ]

1989ஆம் ஆண்டு கட்டைபறிச்சானில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

ரட்ணா

அரியாலையில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

லெப். ரட்ணா இராசநாயகம் இரத்தினகுமார்- 38, இரத்தினகுமார் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். ]

இதே சம்பவத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 பொதுமக்கள்

1991ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எம்மைப் பிரிந்த

கணேஸ் [ அன்பழகன் - தேவாலயவீதி, சங்கானை ]

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(சி/3848)

## சிந்தனைக்கு

இன்றியமையாத தேவையின் வலிமையை எதிர்த்து நிற்க எவராலும் முடியாது.
— ஈஸ்கிலஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 28-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# மலையகத்தில்போராட்டம் வரலாற்று நியதி

“இலங்கைத்தமிழர்களுக்கும், மலையகத் தமிழர்களுக்கும் இடையே பூர்வீகத்திலேயே பாரிய பிளவுண்டு. வடக்கு கிழக்குப் பிரச்சினைகள் அமைச்சர் தொண்டமான் பேசமுற்பட்டுள்ளதால் புலிகளின் செல்வாக்கு மலையகத்தில் பரவக்கூடும். வடக்கு கிழக்குடன் மலையகப் பகுதியிலும் நெருக்கடிகள் அதிகரித்தால் அரசாங்கம் ஆட்டம் காணும் ஆபத்து அதிகமாகும் என்பதை உணர்ந்து அமைச்சர் தொண்டமான் தனது திட்டங்களைக் கைவிட வேண்டும்' இவ்வாறு பிரபல பத்திரிகையாளரான மேவின்டி சில்வா பி. பி. ஸிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் மலையகத்தில் நடந்த சில ஆயுத நடவடிக்கைகளும் அவற்றிற்கு எதிராக சிங்கள இராணுவம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளும், சிங்களப் பேரினவாத சக்திகளின் அமைச்சர் தொண்டமானுக்கும், மலையக மக்களுக்கும் எதிரான கூச்சல்களும் சிங்கள புத்திஜீவிகளை பெரும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளன. இது தொடர்பாக அண்மையில் அரசாங்கத்தை எச்சரிக்கத் தொடங்கியுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் இருந்து ஆயுதப்போராட்டம் மலையகதிற்குப் பரவுமாக இருந்தால் அதற்கு எதிராக சிறிலங்காஇராணுவத்தால் போராட முடியாது என புத்திஜீவிகள் அஞ்சுகின்றனர். சிறிலங்காவின் பொருளாதாரம் எந்தவித முன்னறிவித்தலுமின்றி படுத்துவிடும் என்றும் பயப்படுகின்றனர்.

இதன் காரணமாக மலையகத்தில், சிங்களப்பேரினவாத சக்திகளும், அரசாங்கமும் அவசரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது என அவர்கள் எச்சரிப்பதோடு, தமிழர்களுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளைக் கையாள்வதிலும் அக்கறையாகவுள்ளனர். இதன் வெளிப்பாடே மேவின் டி சில்வா போன்றவர்கள் குறிப்பிட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையில் உள்ள பூர்வீக வேறுபாடாகும்.

அதாவது சிங்களவர் மத்தியிலுள்ள முற்போக்கான பத்திரிகையாளர்கள் என்று கூறிக்கொள்ளும் மேவின்டி சில்வா போன்றவர்களும், மலையகத்தில் ஆயுதப்போராட்டம் வளராமல் இருப்பதற்கு அரசியல் ரீதியாக வழிவகைகளைக் காணுவதைத் தவிர்த்து பிரித்தாளும் தந்திரத்தையும், அதன் மூலம் அடக்குமுறைக்குரிய வழிவகைகளையுமே அரசாங்கத்திற்குக் காட்டுகின்றனர்.

ஆனால், மலையகத்திலோ அன்றி இலங்கையில்

# வடக்குப் போரைத் தீர்மானிப்பது சிறிலங்காவின் பொருளாதாரமே

தாரகி - ஐலன்ட் - 5.1.199?

1767 ஆம் ஆண்டு தொடக்கம் 1769 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற முதலாவது மைசூர் போரின்போது, மைசூர் இளவரசர் ஹைதர் அலியை (Hyder Ali) எதிர்த்துப் போர் செய்யப் பிரித்தானியரால் அனுப்பப்பட்ட தளபதி கேணல் வூட் (Colonel Wood) தான் தேர்ந்தெடுத்த இடத்திலேயே போரிட வேண்டுமென்ற நோக்கில் பின்வாங்கிச் சென்ற ஹைதர் அலியை துரத்திச் சென்று சோர்வுற்று ஹைதர் அலிக்கு எழுதிய கடிதத்தில், பெரிய படைபலத்தைக் கொண்ட இளவரசராகிய நீங்கள் குதிரைப்படை இல்லாத ஒரு சிறிய படைப் பிரிவையும், சிறிய பீரங்கிகளையும் கண்டு பின்வாங்கிச் செல்வது அவமானம் என்று குறிப்பிட்டதற்கு பதிலளித்த ஹைதர் அலி, என்னுடைய போர்முறையை நாளடைவில் நீர் காண்பீர். எனது குதிரைப்படையில் இருக்கும் ஒவ்வொரு குதிரையின் பெறுமதியும் ஆயிரம் ரூபாவாக இருக்கும் போது. இரண்டு சதம் பெறுமதியற்ற உனது பீரங்கிக் குண்டுக்கு அவற்றை நான் பலியாக்குவதா? உனது படையினரின் கால்கள் அவர்களது உடலைப் போல் வீங்கும் வரை அவர்களை நான் நடக்க வைப்பேன். உனக்கு உண்பதற்கு உணவோ, குடிப்பதற்கு தண்ணீரோ இல்லாதிருக்கும். உன்னுடைய முரசு கொட்டும் ஒவ்வொரு முறையும் உன்னையும் உனது நடவடிக்கைகளையும் பற்றி என்னால் அறிந்துகொள்ள முடியும். ஆனால் என்னைப்பற்றி அறிந்துகொள்ள உன்னால் முடியாது. நான் உன்னுடன் போர் புரிவேன். ஆனால் அது நீர் நினைத்த நேரத்திலல்ல என எழுதியிருந்தார்.

## இக்கட்டான நிலை

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் இனிமேல் சிறிலங்கா இராணுவத்தினருடன் தற்காப்பு சமரிலோ அல்லது அவர்களை எதிர்த்து பாரிய அளவிலான சமரிலோ ஈடுபட முடியாது. இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் தீவிரமான போக்கின் காரணமாக, 1989 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் பெருக்கிக் கொண்டிருக்கும் இராணுவ வளங்கள் பெறுமதிமிக்கவையாக ஆக்கப்பட்டுள்ளன. ஹைதர் அலி மைசூர் போரில் தனது குதிரைப்படையினரை அங்கிலேயரது பீரங்கிக் குண்டுகளுக்கு பலியாக்க விரும்பாதது போன்று திரு.

ணுவத்திடமிருந்து பாதுகாக்கத் தங்களது திறமைசாலிகளை விடுதலைப் புலிகள் ஈடுபடுத்த மாட்டார்கள். தளராத உறுதியையும், சக்தி வாய்ந்த ஆயுதபலத்தையும் அதிக எண்ணிக்கையான போராளிகளையும் கொண்டிருந்த போதிலும், பீரங்கிப் பலமில்லாமல் அல்லது எதிரியின் பீரங்கித் தாக்குதலை எதிர்க்கக் கூடிய பலம் இல்லாமல் மரபுவழிப்போர் பயனளிக்கமாட்டாது என்பதை ஆனையிறவைக் கைப்பற்றுவதற்காக நடாத்திய மரபுவழிச் சமரிலிருந்து விடுதலைப் புலிகள் அறிந்து கொண்டனர்.

ஆனையிறவுச் சமரில் ஈடுபடுத்தியது போல் மேலும் சில மரபுவழிச் சமர்களில் மிகவும் கூடுதலான போராளிகளை விடுதலைப் புலிகள் ஈடுபடுத்துவது போராளிகளை எல்லாப் பகுதியிலிருந்தும் அழைத்து வந்து ஆனையிறவு சமரில் ஈடுபடுத்தியது போன்று பீரங்கித் தாக்குதலுக் கெதிரான பாதுகாப்பு எதுவுமின்றிச் சண்டையில் விடுதலைப் புலிகள் ஈடுபடுவார்களேயானால் அவர்களைத் தேடிச்செல்வதற்கோ, இராணுவ முகாம்களை அமைப்பதற்கோ ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ இலங்கை அரசாங்கத்திற்குச் செலவு செய்ய வேண்டிய அவசியமில்லாது போய் விடும்.

நாம் கற்பனை செய்வது போல் விடுதலைப்புலிகள் இப்படி நடந்து கொள்வார்களாயின் அது இராவணுத்தினருக்குச் சாதகமாக அமையும். இராணுவ ரீதியாக வடமாகாணத்தை தனது கட்டுப்பாட்

ஈரோஸ் அமைப்பின் கருத்தையும் அவர்கவனத்தில் கொள்ள வேண்டியவராகவிருக்கின்றார். இந்த இரு குழுக்களும் இரு வேறுவிதமான போக்கைக் கடைப்பிடிப்பவை. தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள இடங்களை இராணுவத்தினருக்கு விட்டுக்கொடுத்துவிட்டு மீண்டும் கரந்தடிப்போர்முறைக்குத் திரும்ப இவர்களில் ஒரு பகுதியினர் விரும்புகின்றனர். தென் பகுதியிலுள்ள முக்கிய பொருளாதார இலக்குகள் மீது தாக்குதல்களை மேற்கொள்வதை அடுத்த பகுதியினர் விரும்புகின்றனர் திரு. மாத்தயா அவர்களினதும் செல்வாக்கைப்பெற்ற வன்னிப்பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளும் கிழக்கில் உள்ள புலிகளும் கரந்தடிப் போர் முறையை விரும்புகின்றனர். ஈரோஸ்

களை நிலையாக வைத்திருப்பதற்கும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் இராணுவம் மேலதிகமான பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இப்படியான சந்தர்ப்பங்களில் பெரும் விலைகொடுத்துப் பெற்ற இராணுவத்தளபாடங்கள் கூட அழிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

## இடருக்குள்ளாக்குதல்

இராணுவத்தினருடைய இரும்பாலான வாகனங்கள் விடுதலைப்புலிகளுடைய சிறிய தாங்கி எதிர்ப்பு ஆயுதங்களுக்கும், கண்ணிவெடிகளுக்கும் சிக்கி அழிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. இராணுவச் செலவினங்களுக்கு நிதியைப் பெறுவதே அரசாங்கத்துக்கு பெரும் பிரச்சினையாக இருக்கும்

வார்களாகில் அவர்களது ஆட்பலத்தை இராணுவத்தினரால் வெகுவாகக் குறைக்கக்கூடியதாக இருக்கும். ஹைதர் அலி கூறியிருப்பது போன்று பீரங்கிக் குண்டுகள் மலிவானவை. விடுதலைப்புலிகளுக்கும் அவை அப்படியே. ஆனால் அவர்கள் மனித வளத்தையே பெறுமதிமிக்க ஒன்றாகக் கருதுகின்றார்கள். ஒரு நிலையான படையை அமைக்க வேண்டுமென விரும்பும் திரு. பிரபாகரன் மேலும் பல மரபுவழிச் சமர்களை நடாத்த எண்ணுவாராகில் விடுதலைப் புலிகளின் ஆட்பலத்தை இராணுவத்தினரால் ஒருவேளை குறைக்க முடியும்.

## குறைத்தல்

பீரங்கிக் குண்டுத் தாக்குதலையும், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் பெரிய அளவில் மேற்கொள்வதன் காரணமாக சிறிய அளவு பொதுமக்கள் இழப்புடன் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை விரைவில் குறைக்க முடியும். இந்திய அரசர்களையும், படைத்தளபதிகளையும் சினமுறச்செய்து அவர்களை வலிந்து சண்டைக்கு அழைத்து அச் சண்டைகளில் வழிவழி மரபு வழிச் சண்டையை நடாத்திய இந்தியப் படைகளைத் தங்களது பீரங்கிகளுக்கு இரையாக்கி வெற்றி பெற்ற சம்பவங்கள், பிரித்தானியர்கள் இந்தியாவை வெற்றி கொண்ட வரலாற்றில் உள்ளன.

இதே போன்று விடுதலைப்

டுக்குள் வைத்திருக்க ஏற்படும் செலவினத்தைத் தடுக்கும் நோக்குடன் இராணுவம் ஒரு குறிப்பிட்ட இடத்திலும், நேரத்திலும் பெரும் எண்ணிக்கையாக விடுதலைப் புலிகளை அழிக்க விரும்புகிறது. ஆனையிறவு மற்றும் மணலாறு சமர்களின் பின் விடுதலைப் புலிகள் மரபுவழிப்படைபோல் செயற்படுவதைத் தவிர்த்து வருகின்றனர். அப்படி அவர்கள் தொடர்ந்து நடந்தால், அவர்களுடைய கட்டுப்பாட்டிலிருக்கும் இடங்களுக்கு இராணுவம் இலகுவாகச் செல்லக் கூடியதாக இருப்பதுடன் இராணுவ முகாம்களையும் அமைக்க முடியும். இப்பொழுது கடைப்பிடிக்கும் போர் முறையை விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கடைப்பிடிப்பார்களேயானால் அவர்களது மனித வளத்தையும் ஆயுத பலத்தையும்குறைக்க இராணுவத்தினருக்குமுடியாதிருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேஇணக்கத்தை ஏற்படுத்த திரு. தொண்டமான் எடுக்கும் முயற்சியின் நடுவில், வடக்கில் விடுதலைப் புலிகளுடைய பலத்தை ஒடுக்குவதற்கு இராணுவம் பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்க விருப்பது நிச்சயமாகையால் இதன் எதிரொலியாக எதிர்காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்படப்போகின்ற அரசியல் முன்னேற்றம் காரணமாக விடுதலைப்புலிகள் எப்படியான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றார்கள் என்பது பற்றி ஆராய்வது பயனுள்ள

அமைப்பும், விடுதலைப் புலிகளைச் சேர்ந்த திரு. உதயன் போன்றவர்களும் தெற்கிலுள்ள பொருளாதார இலக்குகளைத் தாக்குவதை விரும்பினவர். ஆயுதமேந்தியகாலத்திலிருந்து தமிழ்க் குழுக்களிடையே இந்த இரு போக்குகளும் இருந்து வந்துள்ளனவாயினும் வடக்கில் இராணுவத்தினருடன் சமர்புரிவதைத் தவிர்த்து அங்குள்ள சில இடங்களிலிருந்து விடுதலைப் புலிகள் வெளியேறுவார்களாகில் அவர்களிடம் இவ்வித எண்ணங்கள் மேலாதிக்கம் பெறும் தங்களுடைய இலட்சியத்தை அடையப் பொருத்தமான சர்வதேச சூழ்நிலை உருவாகும்வரை தீவிரமான கரந்தடிப் போரை நடாத்துவதென முதலாவது போக்கைக் கடைப்பிடிப்போர் கூறுகின்றனர். (தங்களுக்குச் சாதகமாக சர்வதேச அரசியல் சூழ்நிலை உருவாகும்வரை தொடர்ச்சியானகிளர்ச்சிகளில் ஈடுபட வேண்டும் என்னும் வாதம் தமிழர் ஐக்கிய முன்னணியால் பிரபலப்படுத்தப்பட்டு அது ஆயுதமேந்திய தமிழ்க் குழுக்களால் பின்பற்றப்பட்டது)

## இயக்கம்

இராணுவத்தினர் மட்டக்களப்பின் உட்பகுதிகளில் சுதந்திரமாக நடமாடுவதை எப்படி விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்துகிறார்களோ அப்படிக் கட்டுப்படுத்தக்கூடிய பலம் வாய்ந்தவர்களாகவிருந்தால், இராணுவத்தினர்

விடுதலைப்புலிகளுடைய இலக்குகள் மீது இராணுவம் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு அவற்றைத் தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்களாயின், அதன் பின் நாட்டின் பொருளாதாரத்தைச் சிர்குலைக்கவே விடுதலைப்புலிகள் எண்ணுவர். விடுதலைப்புலிகளிடையே உள்ள ஈரோஸ் அமைப்பினரும், கிழக்கிலுள்ள விடுதலைப்புலிகளும், தெற்கிலுள்ள பொருளாதார இலக்குகள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள முயல்வார்கள். 1984 ஆம் ஆண்டிலிருந்தே இப்படியான நடவடிக்கைகளுக்கு ஈரோஸ் அமைப்பினர் அந்நிவாரமிட்டிருக்கிறார்கள். இந்தியா தலையிட்டதன் காரணமாக அவர்கள் தங்களது நடவடிக்கைகளை முழுமையாகச் செயல்படுத்த முடியவில்லை. அதனால் தெற்கிலுள்ள மக்களை இலக்காக வைத்தே தங்களது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் தெற்கிலுள்ள மக்களுடன் உறவை ஏற்படுத்த தேவை இருப்பதால் சிங்கள மக்கள் மீதான தாக்குதலை நடத்தமாட்டார்கள். விடுதலைப்புலிகள் தங்களுடைய வளங்களைப் பாதுகாக்கவும், இராணுவத்தினருடன் பாரிய சமரில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் வேறு

ளாதாரம் எந்தவித முன்னறிவித்தலுமின்றி படுத்து விடும் என்றும் பயப்படுகின்றனர்.

இதன் காரணமாக மலையகத்தில், சிங்களப்பேரின வாத சக்திகளும், அரசாங்கமும் அவசரப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது என அவர்கள் எச்சரிப்பதோடு, தமிழர்களுக்கு இடையில் உள்ள முரண்பாடுகளைக் கையாள்வதிலும் அக்கறையாகவுள்ளனர். இதன் வெளிப்பாடே மேவின் டி சில்வா போன்றவர்கள் குறிப்பிட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையில் உள்ள பூர்வீக வேறுபாடாகும்.

அதாவது சிங்களவர் மத்தியிலுள்ள முற்போக்கான பத்திரிகையாளர்கள் என்று கூறிக்கொள்ளும் மேவின்டி சில்வா போன்றவர்களும், மலையகத்தில் ஆயுதப்போராட்டம் வளராமல் இருப்பதற்கு அரசியல் ரீதியாக வழிவகைகளைக் காணுவதைத் தவிர்த்து பிரித்தாளும் தந்திரத்தையும், அதன் மூலம் அடக்குமுறைக்குரிய வழிவகைகளையுமே அரசாங்கத்திற்குக் காட்டுகின்றனர்.

ஆனால், மலையகத்திலோ அன்றி இலங்கையில் உள்ள தேசிய சிறுபான்மை இனங்களோ சிங்களப் பேரினவாதத்திக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகவே உள்ளது. ஏனெனில் சிங்களப்பேரினவாதம் பௌத்த சிங்களவரை விட ஏனைய எவரையும் இலகுவில் விட்டு வைத்ததாக இல்லை. வரலாற்று ரீதியாக பிற மதத்தவர்கள் மீதும் இனத்தவர் மீதும் அது தாக்குதலை நடத்தியே வந்துள்ளது. ஆனால் காலத்துக்குக்காலம் தாக்குதல் இலக்குத்தான் மாறியுள்ளது.

இந்நிலையில் ஓர் இனம் அரசியல் விழிப்புணர்வு பெற்று போராட்டத்தை முந்தி ஆரம்பித்திருக்கலாம், ஓர் இனம் பிந்தி ஆரம்பிக்கலாம். ஆனால் ஒடுக்கப்படும் இனங்கள் போராட்டங்களை ஒரு போதும் நடத்தாமல் இருக்கப்போவதில்லை. அவை தவிர்க்கப்படமுடியாதவை.

ஆகையினால் மலையக மக்களின் போராட்டமும் தவிர்க்க முடியாதது. அத்தோடு தென்னிலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டபோது இலங்கைத்தமிழர், மலையகத் தமிழர் என வேறுபாடு காட்டப்படவில்லை. 1948 இல் ஆங்கிலேயர் வெளியேறியதிலிருந்து நடந்த அரசியல் ஒடுக்குமுறைகளில் இலங்கைத்தமிழர் போன்றே மலையகத் தமிழரும் பாதிக்கப்பட்டனர்.

இந்நிலையில், இலங்கைத்தமிழருக்கும், மலையகத் தமிழருக்கும் இடையில் பூர்வீக வேறுபாடு இருந்தால் என்ன? ஒற்றுமை இருந்தால் என்ன? அடக்கப்பட்ட இனம் போராடுவது தவிர்க்க முடியாதது. அதற்கு எதிராக பேரினவாத சக்திகள் எந்தவித தந்திரத்தைக் கையாண்டாலும் அவை வெற்றி அளிக்கப்போவதுமில்லை.

லல்ல என எழுதியிருந்தார்.

## இக்கட்டான நிலை

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் இனிமேல் சிறிலங்கா இராணுவத்தினருடன் தற்காப்பு சமரிலோ அல்லது அவர்களை எதிர்த்து பாரிய அளவிலான சமரிலோ ஈடுபட முடியாது. இந்தியா விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் தீவிரமான போக்கின் காரணமாக, 1989 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் பெருக்கிக் கொண்டிருக்கும் இராணுவ வளங்கள் பெறுமதி மிக்கவையாக ஆக்கப்பட்டுள்ளன. ஹைதர் அலி மைசூர் போரில் தனது குதிரைப்படையினரை அங்கிலேயரது பீரங்கிக் குண்டுகளுக்கு பலியாக்க விரும்பாதது போன்று திரு. பிரபாகரன் அவர்களும் தனது இராணுவ வளங்களை இலங்கை இராணுவத்தின் சுடுகலன்களுக்கும், பீரங்கிகளுக்கும் பலியாக்காது பாதுகாக்க விரும்புகின்றார். யாழ்ப்பாணத்தை சிறிலங்கா இரா

## குறைத்தல்

பீரங்கிக் குண்டுத் தாக்குதலையும், விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களையும் பெரிய அளவில் மேற்கொள்வதன் காரணமாக சிறிய அளவு பொதுமக்கள் இழப்புடன் விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையை விரைவில் குறைக்க முடியும். இந்திய அரசர்களையும், படைத்தளபதிகளையும் சினமுறச்செய்து அவர்களை வலிந்து சண்டைக்கு அழைத்து அச் சண்டைகளில் வழிவழி மரபு வழிச் சண்டையை நடாத்திய இந்தியப் படைகளைத் தங்களது பீரங்கிகளுக்கு இரையாக்கி வெற்றி பெற்ற சம்பவங்கள், பிரித்தானியர்கள் இந்தியாவை வெற்றி கொண்ட வரலாற்றில் உள்ளன.

இதே போன்று விடுதலைப் புலிகளும் வடக்கில் மரபுவழிச் சமரில் ஈடுபடுவார்களேயாகில் அவர்களின் பெறுமதி மிக்க மனித வளத்தை குறைந்த செலவுடன் விரைவாகவும் அழிப்பதற்குஇராணுவத்திற்கு இலகுவாக இருக்கும். தங்க

மூறையை விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் கடைப்பிடிப்பார்களேயானால் அவர்களது மனித வளத்தையும் ஆயுத பலத்தையும்குறைக்க இராணுவத்தினருக்குமுடியாதிருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேஇணக்கத்தை ஏற்படுத்த திரு. தொண்டமான் எடுக்கும் முயற்சியின் நடுவில், வடக்கில் விடுதலைப் புலிகளுடைய பலத்தை ஒடுக்குவதற்கு இராணுவம் பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்க விருப்பது நிச்சயமாகையால் இதன் எதிரொலியாக எதிர் காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்படப்போகின்ற அரசியல் முன்னேற்றம் காரணமாக விடுதலைப்புலிகள் எப்படியான நடவடிக்கைகளை எடுக்கப்போகின்றார்கள் என்பது பற்றி ஆராய்வது பயனுள்ளதாகவிருக்கும்.

இறுதி முடிவுகள் யாவற்றையும் திரு. பிரபாகரன் அவர்களே தீர்மானிக்கின்றாராகிலும், வன்னி மற்றும் கிழக்குப் பிரதேசங்களிலுள்ள விடுதலைப் புலிகளின் கருத்தையும்,

தென் முதலாவது போக்கைக் கடைப்பிடிப்போர் கூறுகின்றனர். (தங்களுக்குச் சாதகமாக சர்வதேச அரசியல் சூழ்நிலை உருவாகும்வரை தொடர்ச்சியானகிளர்ச்சிகளில் ஈடுபட வேண்டும் என்னும் வாதம் தமிழர் ஐக்கிய முன்னணியால் பிரபலப்படுத்தப்பட்டு அது ஆயுதமேந்திய தமிழ்க் குழுக்களால் பின்பற்றப்பட்டது)

## இயக்கம்

இராணுவத்தினர் மட்டக்களப்பின் உட்பகுதிகளில் சுதந்திரமாக நடமாடுவதை எப்படி விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்துகிறார்களோ அப்படிக் கட்டுப்படுத்தக்கூடிய பலம் வாய்ந்தவர்களாகவிருந்தால், இராணுவத்தினர் வடக்கில் பல முகாம்களை அமைக்கக் கூடியதாகவிருந்தாலும், அவர்றுக்கான விநியோகங்களை அவர்கள் ஆகாய மார்க்கமாகவே செய்யவேண்டியிருக்கும். விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றுமிடங்

கிறார்கள். இந்தியா தலையிட்டதன் காரணமாக அவர்கள் தங்களது நடவடிக்கைகளை முழுமையாகச் செயல்படுத்த முடியவில்லை. அதனால் தெற்கிலுள்ள மக்களை இலக்காக வைத்தே தங்களது நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் தெற்கிலுள்ள மக்களுடன் உறவை ஏற்படுத்த தேவை இருப்பதால் சிங்கள மக்கள் மீதான தாக்குதலை நடத்தமாட்டார்கள். விடுதலைப்புலிகள் தங்களுடைய வளங்களைப் பாதுகாக்கவும், இராணுவத்தினருடன் பாரிய சமரில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் வேறு வழிவகைகளைக் கண்டறிய வேண்டியுள்ளது 1992 இல் சிறிலங்காவின் பொருளாதாரமே வடக்கில் நடக்கும் போராட்டத்தின் முடிவைத் தீர்மானிக்கும்.

ஈராக்கின்

# எண்ணெய்ஏற்றுமதி பற்றிய 2-வது சுற்று பேச்சுவார்த்தை

(நியூயேரர்க்)

ஐக்கிய நாடுகளுக்கும் ஈராக்கிற்குமிடையில் மீண்டும் எண்ணெய் ஏற்றுமதிகளை ஆரம்பிப்பது பற்றிய இரண்டாவது சுற்றுபேச்சுவார்த்தைகள் வியன்னாவில் வரும் பெப்ரவரி 5, 6 7 ஆம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக ஐ. நா. பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்தமாத ஆரம்பத்தில் முதலாவது சுற்றுப்பேச்சுவார்த்தை வியன்னாவில் நடைபெற்றது. ஐ. நா. சபையின் உதவிச் செயலாளர் கோடி அன்னானும் ஈராக்கின் ஐ. நா. தூதுவர் அப்துல் அமீர் அல் அஸ்பாரிக்குமிடையில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றது இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது மற்றொரு சுற்று வட்டப் பேச்சுவார்த்தை அவசியமென்று கூறப்பட்டது. அதன் பிரகாரம் இரண்டாவது சுற்றுவட்டப் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இதேநேரம் ஐ. நா. சபை எண்ணெய் விற்பனையால் பெறப்படும் சகல வருவரியும் ஐக்கிய நாடுகளின் விசேட கணக்கில் வைப்புச் செய்யப்படும் என்றும்,

நூறுகோடி டொலர் ஈராக்கிய பொது மக்களுக்கு தேவைப்படும் உணவு, மருந்து மற்றும் பொருள்களைக் கொளவனவு செய்ய பயன்படுத்தப்படும் என்றும், மீதிப் பணம் போர் நஷ்ட ஈடு மற்றும் ஈராக்கிய கடப்பாடுகளுக்கு செலவு செய்யப்படும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது.

அக்கினோவை

# காரணம் காட்டுமாறு உயர் நீதிமன்றம் கட்டளை

(மணிலா)

பிலிப்பைன்சின் முன்னாள் ஜனாதிபதிபெர்டினன்ட்மார்க்கோஸின் உடலை பிலிப்பைன்ஸில் அடக்கம் செய்யவேண்டாமெனக் கட்டளையிட்டது பற்றிக் காரணம் காட்டுமாறு ஜனாதிபதி அக்கினோவை பிலிப்பைன்ஸ் உயர் நீதி மன்றம் கேட்டுள்ளது.

பத்து நாளைக்குள் காரணம் காட்டுமாறு பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பழைய, புதிய இலக்கங்களை

# தெளிவாக எழுதுமாறு தபாலதிபர் வேண்டுகோள்

(கொழும்புத்துறை)

யாழ். மா நகர சபை எல்லைக்கு உட்பட்ட யாழ். பிரதம தபால் விநியோகப் பகுதியிலுள்ள சகல வீட்டு விலாசதிற்குரிய பழைய, புதிய இலக்கங்களை வீட்டிற்கு முன்பாக தெளிவாக எழுதி வைக்குமாறுயாழ். பிரதம தபாலதிபர் ஆறுமுகம் மயில்வாகனம் கேட்டுள்ளார்.

இந்தப் பகுதிகளில் உள்ள சிலருக்கு பழைய இலக்கத்திலும், சிலருக்கு புதிய இலக்கத்திலும் தபால்கள் வருவதால் அவற்றை விநியோகிப்பதில் பல சிரமங்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (24)

ஊனமுற்றோர் சங்க

# புதிய பணிமனையில் பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த18ஆம் திகதி அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டயாழ். ஊனமுற்றோர் சங்கபுதியபணிமனையில், ஊனமுற்றோருக்கான சுயதொழில் முயற்சிக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளன என இச்சங்க கௌரவ செயலாளர் கு. சற்குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

தையல் பயிற்சி சிறுநடை தயாரித்தல் சிறுகைத்தொழில் கதிரை பின்னுதல், ஓவியம் சிற்பம் முதலிய சுயதொழில் பயிற்சித்திட்டங்கள், ஊனமுற்றோர் பணிமனையில் தங்கி பயிற்சி பெறவும் வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சமுதாயத்தில் வைத்து பயிற்சி அளிக்கும் திட்டமும், ஊனமுற்றோர் விரும்பும் ஒரு துறையில் அவர்கள் சமுதாயத்திலோ பகுதியிலோ வைத்து ஸ்தாபனங்கள் உதவியுடன் சுயதொழில் பயிற்சி கொடுக்க வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இப் பணிமனையில் சேவி நம்பிய ஊனமுற்றோர் தங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் சற்குணலிங்கம் கேட்டுள்ளார்.

# பௌத்தத்தைக் காப்பாற்ற ஜனாதிபதி இருக்கிறார்

(கொழும்பு)

- பியசிறி

பௌத்த சாசனத்தை ஜனாதிபதி பாதுகாப்பார், பயங்கரவாதத்தை படையினர் முறியடிப்பர் எனவே நீங்கள் வீதிக்கு வராதீர்கள். இவ்வாறு சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் பியசிறி மகாசங்கத்தினர் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், புத்தசாசனத்தை பாதுகாக்க இப்போது தான் அமைச்சு நிறுவப்பட்டுள்ளது. துட்டகைமுனு காலத்தில் கூட புத்தசாசன அமைச்சு இருக்கவில்லை. புத்தசாசன அமைச்சராக இருப்பவர் ஒரு பௌத்தர். பிறக்கும்போது அவரது பெயர் ரணதுங்க பிரேமதாசா இப்போதும் அதே பெயர்தான். அவர் மதம் மாறியவரல்ல. அரசியலுக்காக பெயரை மாற்றியவரல்ல. பௌத்த சாசனத்தை அவர் பாதுகாப்பார் என்று தெரிவித்தார்.

# தமிழருக்கு உதவுவது தமிழகத்தின் கடமை

- செல்லச்சாமி

தமிழர்களுக்கு உதவ வேண்டிய தார்மீகக் கடமை தமிழகத்திற்கு உண்டு என இ.தொ. கா. வின் பொதுச் செயலாளர் செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசிய போதே செல்லச்சாமி இதனைத் தெரிவித்தார். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் எந்த நாட்டுப் பிரஜையாக மாறியிருந்தாலும் அவர்களது தாயகம் தமிழ்நாடுதான் என்றும், அவர்களது ஆன்மீகம், கலை, கலாசாரம், மொழி வளர்ச்சி ஆகியவற்றுக்கு அவர்கள் தமிழகத்தையே நம்பி வந்திருக்கிறார்கள், நம்பியிருக்கிறார்கள் என்றும்,

எனவே உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்களுக்கு உதவ வேண்டிய தார்மீகக் கடமை தமிழகத்திற்கு உண்டு என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

# யுத்தத்திற்கு ஆசிவழங்கும் தேரோ பௌத்தத்தின் பாதுகாவலனா?

## -வாசுதேவநாணயக்காரா கேள்வி?

(கொழும்பு)

போர்களைத் தவிர்க்கவும், மனித உயிர்களை பாதுகாக்கவுமே புத்தபெருமான் முற்பட்டார். ஆனால்மசா நாயக்க தேரோ வடபகுதி சென்று நாகதீப விகாரையை வணங்கிவிட்டு யுத்த நிலவரத்தையும் பார்வையிட்டு யுத்தத்தை முன்னெடுக்குமாறு ஆசீர்வதித்துவிட்டு வந்திருக்கிறார். பௌத்த சாசனத்தை உருவாக்கப் போகின்றாரோ'? என்று நவசமசமாஜ கட்சித் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய சோஷலிச முன்னணி எம்.பியுமான வாசுதேவ நாணயக்காரா கேள்வியொன்றை எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றத்தில், கடந்த வெள்ளிக்கிழமை பௌத்த அற நிலையங்கள் (திருத்தம்) சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய வாசுதேவ நாணயக்காரா தொடர்ந்து பேசும்போது;

தமிழர்கள் தாம் வாழும் இடங்களைப் பாதுகாக்க முற்படும்போது அது தேசத்துரோகச் செயல் என பௌத்த குருமார்கள் கிளர்ந்தெழுகின்றார்கள். பௌத்த கோயில்களுக்குரிய காணிகள், சிங்கள பிரதேச காணிகள் 99 வருட குத்தகைக்கு கொடுக்கப்படும்போது, வெளிநாட்டாருக்கு தாரைவார்க்கப்படும் போது ஏன்எதிர்த்துப் பேசுவதில்லை?

தமிழர் தம் பிரதேசம் குறித்து பேசும்போது மட்டும் தேசாபிமானம் கிளர்ந்தெழுகிறது. வெளிநாட்டார் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் போது எங்கே தேசாபிமானம்? தேசாபிமானத்திலும் இரட்டை வேடமா?

மலர்த்தட்டை தலையில் வைத்துக்கொண்டு கோயிலுக்குச் சென்று வழிபட்டுவிட்டு மறுபக்கத்தால் சென்று உயிர்களுக்கு ஊறு விளைவிப்பதில் அர்த்தமில்லையே என்றும் வாசுதேவ தமதுரையில் குறிப்பிட்டார்.

## சிறிமாவின் முயற்சி அநுராகுழுவால் முறியடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கொண்ட மூவர் குழு முயற்சியை அநுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்கள் முறியடித்துள்ளனரென்று கொழும்பில் இருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தான் இல்லாத சமயத்தில் கட்சியின் விவகாரங்களைக் கவனிப்பதற்கு மூவரைக் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றை நியமிப்பதற்குச் சிறிமாவோ முயற்சித்தார் என்பது தெரிந்ததே. ஆனால் இந்த முயற்சியை இக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுராவின் ஆதரவாளர்கள் முறியடித்துள்ளனர் என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இக்கட்சியின் மத்திய நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தலைமைப்பீடப் பிரச்சினை திருமதி சந்திரிகா குமாரணதுங்காவை கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவிற்கு நியமிப்பது பற்றிய யோசனை ஆகிய விடயங்களை விவாதிக்காமல் ஒத்திவைப்பது என முடிவு செய்யப்பட்டது என்றும் கொழும்பிலிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் அநுராபண்டாரநாயக்கா கட்சியின்தலைமைப்பீடத்தை ஏற்றுக்கொண்டாரு அதனை எதிர்ப்பவர்களில் ஒலவரான அவரது சொந்த மாமனார்கேணல் அனுவத்தரசட்ட அரசியலிலிருந்து விலகலாம் என தெரிவிக்கப்படுகிறது. இது அநுரா பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சிப்பதில்தலைவராக நியமிக்கப்பட்டதும் மூன்று மாத கால லீவில் சென்றதில் இருந்து தெரிகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முறைசாராக்கல்வி உபவள நிலையம் திறப்பு

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவின் சாவகச்சேரி கல்விக்கோட்டத்திற்கான கல்வி உபவள நிலையத்தில் 1989 இல் முறைசாராக் கல்விப் பிரிவில் தொழிற்திறன் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்

## லலித் குழுவினரின் ராஜதந்திர பாஸ்போட் ரத்து

(கொழும்பு)

ச்ஐகியதேசியக் கட்கியிலிருந்து வெளியேற்றப்பட்ட எட்டு எம்.பி.க்களின் ராஜதந்திர கடவுச்சீட்டுக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் வோல்டர் பெர்னான்டோ அறிவித்துள்ளார்.

முன்னாள்அமைச்சர்களான லலித் அத்துலத், காமினிதிசாநாயக்கா, பிரேமச்சந்திரா உட்பட எட்டு எம்.பிக்களின் ராஜதந்திர கடவுச்சீட்டுக்களே இவ்வாறு ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இது குறித்து இந்த எட்டு எம்.பி.க்களுக்கும் வோல்டர் பெர்னான்டோ எழுதியுள்ள கடிதத்தில் அவர்களதும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் வழங்கப்பட்டராஜதந்திர கடவுச்சீட்டுக்களை திருப்பி ஒப்படைக்கும்படி கேட்டுள்ளார்.

அத்துடன் வெளிநாட்டு பிரயாணங்களின் போது வழங்கப்படும் ராஜதந்திர வசதிகளையும் இவர்கள் இழக்கின்றார்கள் என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இந்திய - சிறிலங்கா உறவில் புதிய சகாப்தம்

### - இந்தியத்தூதுவர் ஜா

(சென்னை)

இலங்கை - இந்திய நட்புறவில் புதிய சகாப்தத்திற்கான பல அலைகளை நாம் காணுகின்றோம் என இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் என். என். ஜா கூறியுள்ளார்.

இந்திய குடியரசு தினத்தை முன்னிட்டு அவர் விடுத்த செய்தியில் மேலும் சுயஆதிக்க சமுதாய முறைகள் தற்போது ஒழிக்கப்பட்டு இன்று பிரச்சினைகளுக்கு தீர்வுகாணகூட்டு முயற்சிகளை மேற்கொள்ளும் காலம் வந்துவிட்டது. இதில் சில பிரச்சினைகள் முற்றுமுழுதாக தேசிய பிரச்சினைகளாகவே இருக்கின்றன எனக் கூறினார்.

## சோமாலியாவில் பட்டினியாலும் போராலும் 20,000 பேர் உயிரிழப்பு

(நியூயோர்க்)

சோமாலியாவில் கடந்த இருமாதங்களாகஇடம்பெற்ற சண்டையாலும், பசிபட்டினியாலும் 20,000 சோமாலியர்கள் உயிர் இழந்துள்ளனர் என ஐ நா. பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது.

இங்கு கடந்த நவம்பர் 17 ஆம் திகதியன்று சோமாலிய [illegible] யப்படுவதற்கு தடை விதித்துள்ளது.

பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

## குடாக் கடலில் கைதான

## 700 இந்து ஆலயங்கள் வடக்கு - கிழக்கில் சேதம்

"வடக்கு-கிழக்குமாகாணத்தில் கடந்தகால அசம்பாவிதங்கள் காரணமாக 700 இந்து ஆலயங்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

60 ஆலயங்களில் இருந்த விக்கிரகங்கள் அகற்றப்பட்டும் உள்ளன''

கடந்த சனிக்கிழமை (25-01-92) நல்லை ஆதீனத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட இந்து சமயப் பேரவையின் ஆரம்பக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில்ஒன்று மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இந்து சமயப் பேரவையை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அங்கே நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மேலும் சில வருமாறு:

''மேற்படி ஆலயங்களைப் புனர் நிர்மாணம் செய்வதற்கும், காணாமற்போன விக்கிரகங்களை நிலை நிறுத்தவும் உதவுக.

திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், கதிர்காமம், ஈழத்துச் சிதம்பரம், கீரிமலை புனித தீர்த்தம் ஆகியவற்றிற்கு இந்து சமய மக்கள் சென்று அனுஷ்டானங்களை நிறைவேற்ற வழிவிடுக.

ஓராண்டுக்கும்மேலாக நடத்தப்படும் அனாவசிய யுத்தத்தை உடனடியாக நிறுத்துக

இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் போதனைகளான அன்பு, கருணை, அஹிம்சை, சகிப்புத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணுக.

போரின் கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மக்களுக்கும் குறிப்பாக மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு நிவாரணத்தை வழங்குக

அனாதைகள், விதவைகள் ஆகியோருக்கான மறுவாழ்வுத் திட்டங்களை உடனடியாக செயற்படுத்துக

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை மேற்படி தீர்மானங்கள் அடங்கிய பிரதிகளை சிறிலங்கா ஜனாதிபதிக்கும், இந்து சமயகலாசார அமைச்சு சிறிலங்கா அரசு போன்றவற்றிற்கும் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்துள்ளது. (21)

## போக்கு வரத்துக் கண்காணிப்பில் காவற்துறை தீவிர கவனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் வீதிப் போக்குவரத்தைக் கண்காணிப்பதிலும், ஒழுங்குபடுத்துவதிலும் தமிழீழக் காவற்துறையினர் நேற்றுமுதல்தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

பிரதான வீதிகள், சந்திகள் மற்றும் வாகனப் போக்குவரத்து அதிகமாகக் காணப்படும் இடங்களிலும், மக்கள் அதிகளவு கூடும் பகுதிகளிலும் மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. தமிழீழ காவற்றுறையினரும், காவற்றுறைத் தொண்டர் படையினரும் இணைந்துஇந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் இதற்காக மேற்படி பகுதிகளில் மேலதிக காவற்றுறையினர் கடமைக்காக நிறுத்தப்பட்டிருந்தனர். இத்துடன் அனைத்துப் பகுதிகளிலும் காவற்றுறையினரது ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. (க)

## சிங்கப்பூரில் ஆசியான் உச்சிமாநாடு

(சிங்கப்பூர்)

'ஆசியான்' அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களின் நான்காவது உச்சி மாநாடு நேற்று சிங்கப்பூரில் ஆரம்பமாகியுள்ளது.

1987 இல் மூன்றாவது உச்சி மாநாடு மணிலாவில் இடம்பெற்றது. புதிதாக ஏற்பட்டுவரும் சர்வதேச மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் இந்த நாடுகள் நடந்து கொள்ளும் என்பதை தெரிவிக்கும் எட்டு அம்ச பிரகடனம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த உச்சி மாநாடு இன்று முடிவடையும்.

## யாழ். போதனா வைத்தியசாலை கழிவகற்றும் வேலை பரீட்சார்த்தம்

யாழ். போதனா வைத்தியசாலையின் மல,சல கழிவை இயந்திரம் மூலம் அகற்றும் வேலை எதிர்வரு வெள்ளிக்கிழமைபரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இக்கழிவை அகற்றும் வேலை பரீட்சார்த்தமாக மேற்கொள்வதென நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நீண்டகாலமாக யாழ்.நகரில் நாற்றமெடுக்கும் கழிவினை அகற்றும் முயற்சியாக இது நடைபெறவுள்ளது. இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் மேற்படி முறைமூலம் தொடர்ந்து கழிவகற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட இருக்கிறது. பண்ணைக் கடற்கரையில் காணப்படும்கழிவகற்றும் இயந்திரத்தை திருத்தும்முயற்சியில் ஈடுபடும் தொழிலாளர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது

## 2ஆவது தொகுதி அகதிகள் நேற்றுப் புறப்பட்டனர்

கவனிப்பதற்கு மூவரைக் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றை நியமிப்பதற்குச் சிறிமாவோ முயற்சித்தார் என்பது தெரிந்ததே. ஆனால் இந்த முயற்சியை இக்கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுராவின் ஆதரவாளர்கள் முறியடித்துள்ளனர் என்றும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற இக்கட்சியின் மத்திய ... நாயக்கா கட்சியின் தலைமைப் பீடத்தை ஏற்றுக்கொண்டாரு அதனை எதிர்பவர்களில் ஒல்வரான அவரது சொந்த மாமனார்கேணல் அனுவத்தரசட்ட அரசியலிலிருந்து விலகலாம் என தெரிவிக்கப்படுகிறது. இது அநுரா பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சிப்பதில் தலைவராக நியமிக்கப்பட்டதும் மூன்று மாத கால லீவில் சென்றதில் இருந்து தெரிகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முறைசாராக்கல்வி உபவள நிலையம் திறப்பு

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவின் சாவகச்சேரி கல்விக்கோட்டத்திற்கான கல்வி உபவள நிலையம் சாவகச்சேரி றிபேக கல்லூரியில் நாளை 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

மேற்படி விழாவையொட்டி கண்காட்சி இடம்பெறும். அங்கு இடம்பெறவிருக்கும் கூட்டத்தில் 1989 இல் முறைசாராக் கல்விப் பிரிவில் தொழிற்திறன் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மண்ணெய் விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)

இன்று முதல் மண்ணெண்ணெய் விலை லீற்றர் ஒன்று முப்பது ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபையின் வர்த்தகக்குழு இந்த விலையை நிர்ணயம் செய்துள்ளது. சகல பல நோ. கூட்டுறவு சங்கங்களும் இந்த விலை நிர்ணயத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கூட்டுறவுத்துறையினர் வேண்டுகோள் விடுத்திருப்பதோடு, தற்போதைய மண்ணெண்ணெய் கையிருப்பு முடிவுற்றதும் மேலும் விலை குறைப்புபற்றி ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளது

### போரை

... தாக தெரிவித்தனர்.

வடகிழக்கில்நடைபெற்றுவரும் யுத்தத்திற்கு உடனடியாக ஒரு முடிவுகட்டி, அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டுமென்றும், அரசியல் தீர்வு குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் தவறுமானால் உதவிகளை நிறுத்துவதற்கு கனடா அரசாங்கம் தயங்காது எனவும் இத் தூதுக்குழுவினர் அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

---

> **இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
> **யாழ்ப்பாணக் கிளை**
>
> ## தையல் பயிற்சி ஆசிரியர்கள்
>
> மேற்படி பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்றப்பட்டதற்கான தகைமைச் சான்றிதழ் உள்ள அனுபவம் உள்ளோர் 31-01-92க்கு முன் விண்ணப்பிக்கவும். 01-02-92 முற்பகல் 10-00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெற உள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் தரவும்.
>
> ## தையல் பயிற்சி மாணவர்கள்
>
> மேற்படி பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை 01-02-92க்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைக்கவும். இப் பயிற்சி இலவசமாக அளிக்கப்படும். ஊனமுற்றோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். 03-02-92 முற்பகல் 10-00 மணிக்கு பயிற்சி ஆரம்பமாகும்.
>
> 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
> 27-01-92
>
> கௌரவ செயலாளர்
>
> (சி/3857)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

... பல அலைகளை நாம் காணுகின்றோம் என இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் என். என். ஜா கூறியுள்ளார்.

இந்திய குடியரசு தினத்தை ... சினைகளுக்கு தீர்வுகாணகூட்டு முயற்சிகளை மேற்கொள்ளும் காலம் வந்துவிட்டது. இதில் சில பிரச்சினைகள் முற்றுமுழுதாக தேசிய பிரச்சினைகளாகவே இருக்கின்றன எனக் கூறினார்.

### சோமாலியாவில்

## பட்டினியாலும் போராலும் 20,000 பேர் உயிரிழப்பு

(நியூயோர்க்)

சோமாலியாவில் கடந்த இருமாதங்களாக இடம்பெற்ற சண்டையாலும், பசிபட்டினியாலும் 20,000 சோமாலியர்கள் உயிர் இழந்துள்ளனர் என ஐ நா. பாதுகாப்புச் சபை அறிவித்துள்ளது.

இங்கு கடந்த நவம்பர் 17 ஆம் திகதியன்று சோமாலிய ஜனாதிபதி அலிமத் ஹியின் இராணுவப் படைகளுக்கும், அவரின் போட்டியாளரான ஜெனரல் முஹம்மத்பராரெட்டிக்குமிடையில் சண்டை ஏற்பட்டது. இதனாலேயே இந்த உயிர் இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து ஐ. நா. பாதுகாப்புச்சபை சோமாலியாவிற்கு ஆயுதங்கள் விற்பதற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு தடை விதித்துள்ளது.

பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட பாதுகாப்புச் சபையில் இத்தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

### கொள்ளையர்

இவர்களிடம் இருந்து ஏழு தங்கச் சங்கிலிகளும், ஏழு தங்க மோதிரங்களும், பணமும், இரு பொய்யான இராணுவ அடையாள அட்டைகளும் மீட்கப்பட்டன என்றும், பொருள்களை இழந்தவர்கள் ராகம பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் ராகம பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### என்மீதான

என்பது சில பத்திரிகைகளின் திரிபுபடுத்தப்பட்ட செய்தியாகும். இதை எவரும் நம்ப வேண்டாம் என்றும், என்னைப் பற்றி வெளிவந்துள்ள குழப்பமான செய்திகளுக்கு விளக்கமளிக்கவே இங்கு நான் வந்துள்ளேன் என்றும் அங்கு அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டின் ஜனாதிபதியைப் போலவோ அல்லது அமைச்சர்களைப் போலவோ நான் எப்பகுதிக்கும் தனியாகச் செல்வதற்கு அஞ்சமாட்டேன் என்றும் எனது பாதுகாப்பிற்கு ஆயிரக்கணக்கான படையினர் தேவையில்லை என்றும் குறிப்பிட்ட அவர், சர்வோதயத்தின் மூலம் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் தீர்மானித்துள்ளோம் என்றும் அங்கு தெரிவித்தார்.

90ஆம் ஆண்டு ஜூன்மாதம் யுத்தநிலை ஆரம்பித்த பின்னர் வவுனியா சர்வோதய கிளை நிர்வாகத்தினரால் தமிழ்ப் பகுதியில் எதுவித வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (தி)

### குடாக் கடலில் கைதான

## மீனவர் குடும்பங்களுக்கு உலர்உணவுப்பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாக் கடலில் அண்மையில் சிறிலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களை வழங்க அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

கடந்த மூன்று வாரங்களில் குருநகர் கடற் பகுதியில் மீன் பிடித்த இருபது மீனவர்களை இராணுவம் கைது செய்தது தெரிந்ததே. இம் மீனவர்களின் குடும்பங்களுக்கு உதவி அரசாங்க அதிபர் ஊடாக இதுவரை நிவாரணம் வழங்கப்படாதிருந்ததால் அவர்களுக்கான நிவாரணத்தை தொடர்ந்து வழங்க பெயர் குறிப்பிட விரும்பாத அரசசார்பற்ற நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

மேற்படி மீனவக் குடும்பத்தினர் இதுவரை நிவாரணம் பெறாதிருப்பின் அவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கு நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

### பழுதடைந்த

பொழுது இவற்றின் தயாரிப்புக்களும் கைவிடப்பட்டுள்ளதால் இவற்றிற்கான உதிரிப்பாகங்களின் தயாரிப்பும் கைவிடப்பட்டுள்ளது. இதனால் இவை பழுதடையும்போது திருத்தமுடியாதநிலைமை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட மூன்று பீரங்கிப்படகுகள் பழுதடைந்த நிலையில் உள்ளமை தெரிந்ததே.

சீனாவிடமிருந்து சிறிலங்கா அரசினால் வாங்கப்பட்ட கனரக டாங்கிகளுடன் சேர்த்து இந்த மென்ரக டாங்கிகளைப் பயன்படுத்துவது கடினமென இராணுவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பாரம்கூடிய சீனடாங்கிகள் கடல்வழி தரையிறக்கத்திற்குப் பொருத்தமானவையல்ல எனவும், அவை மணற்பிரதேசங்களில் புதைந்துவிடும் எனவும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

### ஆசியான் உச்சிமாநாடு

(சிங்கப்பூர்)

'ஆசியான்' அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களின் நான்காவது உச்சி மாநாடு நேற்று சிங்கப்பூரில் ஆரம்பமாகியுள்ளது.

1987 இல் மூன்றாவது உச்சி மாநாடு மணிலாவில் இடம்பெற்றது. புதிதாக ஏற்பட்டு வரும் சர்வதேச மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் இந்த நாடுகள் நடந்து கொள்ளும் என்பதை தெரிவிக்கும் எட்டு அம்ச பிரகடனம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

இந்த உச்சி மாநாடு இன்று முடிவடையும்.

### மகோற்சவம்

(ஊரெழு)

ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 11. 10 இற்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

மேற்படி உற்சவம் தொடர்ந்து பதினெட்டு நாட்கள் நடைபெற்று பூங்காவனத்துடன் முடிவடையும் என அதன் பரிபாலன சபையின் தலைவர் அறிவித்துள்ளார்.

### நாசவேலையாக

சென்றடைய புலனாய்வு குழுவினரால் ஞாயிறுவரை இயலவில்லை எனவும் சில சடலங்கள் அடையாளம் காணமுடியாதவாறு உருக்குலைந்து போயிருப்பதாகவும் விமானப் படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

### இராணுவ

ரட்ணம் (34 வயது) திருமணமானவரான தாலிக்குட்டி வைரமுத்து (40 வயது) ஆகியோர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

### மனித

யைக் கொல்கிறார்கள் அவர்கள் ஈழம் கேட்கிறார்கள் என்பதற்காக. ஆனால் எம்மை ஏன் கொல்கிறார்கள் என்பது எமக்கே தெரியவில்லையென ஒரு சிங்களப் பெண்மணி பி. பி. சியின் கொழும்பு முகவருக்கு தெரிவித்துள்ளார்.

... சாலையின் மல,சல கழிவை இயந்திரம் மூலம் அகற்றும் வேலை எதிர்வரு வெள்ளிக்கிழமைபரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இக்கழிவை அகற்றும் வேலை பரீட்சார்த்தமாக மேற்கொள்வதென நேற்றுக் காலை யாழ். செயலகத்தில் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நீண்டகாலமாக யாழ்.நகரில் நாற்றமெடுக்கும் கழிவினை அகற்றும் முயற்சியாக இது நடைபெறவுள்ளது. இத்திட்டம் வெற்றியளிக்கும் பட்சத்தில் மேற்படி முறைமூலம் தொடர்ந்து கழிவகற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட இருக்கிறது. பண்ணைக் கடற்கரையில் காணப்படும்கழிவகற்றும் இயந்திரத்தை திருத்தும்முயற்சியில் ஈடுபடும் தொழிலாளர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள்என்பதுகுறிப்பிடத்தக்கது

### பரீட்சார்த்தம்

## 2ஆவது தொகுதி அகதிகள் நேற்றுப் புறப்பட்டனர்

தமிழ்நாட்டிலிருந்து தாயகம் திரும்பும் இரண்டாவது இலங்கை தமிழ் அகதிகள் குழு நேற்று சென்னையிலிருந்து புறப்பட்டுள்ளது. எம். வி. அக்பர் எனும் கப்பலில் 650 பேர் சென்னைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கப்பலுக்கு காவலாக இந்திய கடற்படைக் கப்பல் இன்சார்' கரையோர காவற், படை கப்பல் 'கங்கா தேவி' என்பனவும் கூடவருவதாக தெரியவருகிறது.

மூன்றாவது அகதிகள் குழு அடுத்தமாதம் மூன்றாம் திகதி தமிழ் நாட்டிலிருந்து புறப்படுவர்எனதெரிவிக்கப்பட்டுள்ளது

### காங்கேசன்

இந்தக் கோரிக்கையை நிராகரித்ததுடன் வடபகுதியில்மீண்டும் தொழிற்சாலையைசெயல்பட வேண்டும் என நிர்ப்பந்தித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

> ## பிறந்த நாள் வாழ்த்து!
>
> 
>
> **செல்வன் சாலமன்**
>
> அரியாலையைச் சேர்ந்த ஜேர்மனில் வசிக்கும் ராஜா, மனோ தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாலமன் தனது முதலாவது பிறந்த நாளை ஜேர்மனில் வெகு கோலாகலமாகஇன்றுகொண்டாடுகிறார். இவரைஅப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள் மார், அண்ணன்மார், அக்காமார், பாட்டி யாவரும் பலகலைகளும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றனர்.
>
> [2155]